கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

மூன்றாம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2015/2016 (ஜனவரி-பெப்ரவரி 2018)

# DTS 3143 History of Tamil Theatre

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி–I இல் இருந்து இரண்டு வினாக்களுக்கும் பகுதி-II இல் இருந்து மூன்று வினாக்களுக்கும் என மொத்தம் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

---

## பகுதி–I

01. தமிழ் அரங்கு தமிழர் அரங்கு என்ற சொற்பதங்கள் வெவ்வேறு தளங்களில் புரிதலைத் தருகின்றது.
    1. தமிழ் நாடகம் பற்றிய எண்ணக்கரு யாது?

       (05 புள்ளிகள்)

    2. தமிழ் நாடகம் 600 க்கு முற்பட்ட காலத்தில் சமூக வாழ்வியலுடன் பரிணாமம் பெற்ற விதத்தினைத் தெளிவுபடுத்துக.

       (15 புள்ளிகள்)

02. நாடகம் தொழில் முறையாக வளரும்போது இன்னுமொரு தளத்திற்கு வலுப்பெறும்.
    1. பரத்தையர் ஆற்றுகை மரபு என்றால் என்ன?

       (05 புள்ளிகள்)

    2. இது தொழில் முறையாக வளர்ந்து உச்சமடைந்து பின் எதிர்கொண்ட சவால்களைப் பரிசீலிக்குக.

       (15 புள்ளிகள்)

03. தமிழ்ச் சமூக பண்பாட்டுப் பின்புலத்தில் கோயிற் பண்பாடு வெவ்வேறு தளங்களில் தாக்கம் செலுத்தியது.
    1. கோயிற் பண்பாட்டு சமூக, அரசியல் பின்னணி தமிழ் நாடக வெளியில் ஏற்படுத்திய தாக்கம் பற்றிக் குறிப்பிடுக.

       (06 புள்ளிகள்)

    2. சோழர் காலத்தில் நாடகம் உன்னத வளர்ச்சி அடைந்தது என்பதனை ஏற்கலாமா? இதனை விமர்சனபூர்வமாக ஆராய்க.

       (14 புள்ளிகள்)

## பகுதி–II

04. "பள்ளும் குறவஞ்சியும் தமிழ் நாடகத்திற்கான அங்கீகாரத்தைக் கொடுத்தது" இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை மதிப்பிடுக.

    (20 புள்ளிகள்)

05. தெருக்கூத்து ஆற்றுகையினைக் குறிப்பிட்டு, அது இன்றைய சமூக, அரசியல் வெளியில் பெறும் முக்கியத்துவத்தினை மதிப்பிடுக.

    (20 புள்ளிகள்)

06. தமிழ் நாடக அரங்கக் கற்கைக்கான நுட்பங்கள் தமிழ் நாடக அரங்கில் காணப்படும் விதத்தினைத் தெளிவுபடுத்துக.

    (20 புள்ளிகள்)

07. தமிழ்ப் பிரதேச அரங்குகள் நவீன அரங்க வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பினை எடுத்துக்காட்டுக்களுடன் விபரிக்குக.

    (20 புள்ளிகள்)

*****